DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

**CC.NO.700062/2023**

Deposition of LW3 examined as Pw2 **Dt. 22.07.2025**

| | |
|---|---|
| Name | ஜெயந்தி |
| Father's/Husband's Name | தமிழ்வாணன் |
| Village | மாப்படுகை |
| Taluk | |
| Age | 30/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 22.07.25

(Accused present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்தது எனது மாமனார் சாமிநாதன் ஆவார். கடந்த 2022 ம் ஆண்டு மாதம் தேதி நினைவில் இல்லை. ஒருநாள் இரவு திருவிழந்தூரில் உள்ள ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு எனது மாமனார் அவரது இடது கை ஓரமாக வந்து கொண்டிருந்தபோது பின்புறத்தில் இருந்து வேகமாக இருசக்கர வாகனத்தில் வந்த யாரோ இரு நபர்கள் எனது மாமனார் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டதாகவும் எங்கள் ஊரைச்சேர்ந்த ஹரிகிருஷ்ணன் என்பவர் எங்களிடம் கூறினார். எனது மாமனார் 08.00 மணிக்கு அடிபட்டு விட்டார். எங்களுக்கு தகவலை 08.30 மணிக்கு சொன்னார்கள். நானும் எனது கணவர் மற்றும் உறவினர்களும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த எனது மாமனாரை பார்த்தேன். மேற்படி விபத்தின் காரணமாக அவரின் இடது கால், தலையின் பின்புறம் போன்ற இடங்களில் அடிபட்டும் மற்றும் காது வழியாக ரத்தம் கசிந்து கொண்டிருந்துது. அவர் சுயநினைவின்றி இருந்தார். மேற்படி விபத்தினை ஏற்படுத்தியவர் ஆஜர் எதிரி ராஜா ஆவார், மேல மாப்படுகையில் உள்ள பரிமளா என்பவர் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறார். அவரை தினமும் எதிரி ராஜா என்பவர் தான் மருத்துவமனையில் இருந்து அவரது வீட்டிற்கு அழைத்து வருவது வழக்கம். விபத்து நடந்த அன்றும் ஆஜர் எதிரி ராஜா ப.சா.2 பரிமளாவை மருத்துவமனையில் இருந்து அழைத்து வரும்போதுதான் விபத்து நடந்துள்ளது. போலிசார் என்னை விசாரணை செய்தார். எனது மாமனாருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் இங்கு பார்க்க முடியாது என்றும் மேல் சிகிச்சைக்கு அழைத்து செல்லுமாறும் அறிவுறுத்தினர்.அதன் பேரில் எனது கணவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எனது மாமனாரை அழைத்து சென்றோம். அங்கு சிகிச்சை பலனின்றி எனது மாமனார் 3வது நாள் இறந்து விட்டார். பிரேத பரிசோதனைக்கு பின்னர் எனது மாமனாரின் பிரேதமானது எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை

T.ஜெயந்தி

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

குற்றவியல் நடுவர் எண் I
மயிலாடுதுறை

22/7/25

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

**CC.NO.700062/2023**

Deposition of LW1 examined as Pw1 **Dt. 22.07.2025**

| | |
|---|---|
| Name | தமிழ்வாணன் |
| Father's/Husband's Name | சாமிநாதன் |
| Village | மாப்படுகை |
| Taluk | |
| Age | 49/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 22.07.25

(Accused present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்தவர் எனது அப்பா சாமிநாதன் ஆவார். கடந்த 18.07.2022 ம் தேதி இரவு 08.00 மணிக்கு திருவிழந்தூரில் உள்ள ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு அவரது இடது கை ஓரமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது பின்னாடியில் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து எனது அப்பா மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார். மேற்படி தகவலை எங்கள் ஊரைச்சேர்ந்த ஹரிகிருஷ்ணன் என்பவர் என் வீட்டிற்கு வந்து என்னிடம் சொன்னார். நான் உடனடியாக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த எனது அப்பாவை பார்த்தேன். அவருக்கு விபத்தின் காரணமாக இடது கால், தலையின் பின்புறம் போன்ற இடங்களில் அடிபட்டும் மற்றும் காது வழியாக ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவர் சுயநினைவின்றி இருந்தார். பட்டியல் சாட்சி 2 பரிமளாவை ஆஜர் எதிரி தன்னுடைய வாகனத்தில் அழைத்துகொண்டு வரும்பொழுதுதான் மேற்படி விபத்தானது நடந்துள்ளது. பரிமளாதான் என்னிடம் ஆஜர் எதிரி விபத்தினை ஏற்படுத்தினார் என்றும் அவருடைய பெயர் ராஜா, த/பெ. சட்டநாதன் என்றும் அவர் திருவிழந்தூர் அண்ணா நகரைச் சேர்ந்தவர் என்றும் என்னிடம் கூறினார். எனது அப்பாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் இங்கு பார்க்க முடியாது என்றும் மேல் சிகிச்சைக்கு அழைத்து செல்லுமாறும் அறிவுறுத்தினர்.அதன் பேரில் நான் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எனது அப்பாவை அழைத்து சென்றேன். அங்கு சிகிச்சையில் இருந்தபோது எனது அப்பா பேச முடியாத நிலையில் இருந்ததால் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி எனது அப்பா 21.07.2022 ம் தேதி இறந்து விட்டார். பிரேத பரிசோதனைக்கு பின்னர் எனது அப்பாவின் பிரேதமானது எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை

S. தமிழ்வாணன்

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

22/7/25

நீதித்துறை நடுவர் எண் I

மயிலாடுதுறை